தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

திராவிட மாடல் ஆட்சியில்

ராம்சர் தலங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்வு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக.15-

'தமிழ்நாட்டில் உள்ள ராம்சர் தலங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. நமது திராவிட மாடல் ஆட்சி நிர்வாகம் சுற்றுச்சூழலைக் காப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைத் தளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அது வருமாறு :

திருப்பூர் மாவட்டம் நஞ்சராயன் பறவைகள் காப்பகம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் கழுவேலி பறவைகள் காப்பகம் ஆகியவற்றுடன் சேர்த்து தமிழ்நாட்டில் உள்ள ராம்சர் தலங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

இந்தத் தொடர் சாதனை தமிழ்நாடு வனத் துறையின் அர்ப்பணிப்பு மிகுந்த முயற்சிகளையும், நமது திராவிட மாடல் ஆட்சி நிர்வாகம் சுற்றுச்சூழலைக் காப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ தலைமை!

இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர்கள் சேர்க்க தீவிர களப்பணி!

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், ஆக.15-

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ தலைமையில், என்.எல்.சி தொமுச கலைஞர் அரங்கில் நேற்று (14.8.2024 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, மாவட்ட கழக துணை செயலாளர் பி.வி.பி. முத்துக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.இராசவன்னியன், வி.கே. வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, முன்னாள் எம்.எல்.ஏ. கலைச்செல்வன், ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டுர் அமிர்தலிங்கம், தி. வேல்முருகன், குணசேகரன், செங்குட்டுவன், ஆசை தம்பி, சந்தோஷ், சுரேஷ், பண்ருட்டி ஒன்றிய பெருந் தலைவர் சபா.பாலமுருகன்,

நகர கழக செயலாளர்கள் க.தண்டபாணி, ப.மணிவண்ணன், வி.குருநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், அரங்க.பாலகிருஷ்ணன், பொ.புகழேந்தி, க.அறிவழகன், செந்தமிழ் செல்வி, கருப்பசாமி, பேரூர் கழக செயலாளர்கள் வி.பி.பி.பரமகுரு, செல்வம், ஜெயமூர்த்தி, சுந்தர வடிவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், பாண்டுரங்கன், தங்க நாராயணசாமி, சுரேஷ், சதாம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ராமு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இந்துமதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கோனூர் மதியழகன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் அறிவுடைய நம்பி, மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் பாரி இப்ராஹிம் ,மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் மதன குரு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ், நெல்லிக்குப்பம் நகர மன்ற தலைவர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வமணி, மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் முகமது யூசுப், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதா, துணை அமைப்பாளர் திராவிட செல்வி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், நகர இளைஞரணி அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள் மற்றும் கிளை கழக நிர்வாகிகளுடன், அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞரணி நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் இல்லம்தோறும் நேரில் சென்று கழகத்திற்கு மேலும் வலு சேர்க்கின்ற வகையில் அதிக அளவில் இளைஞரணி உறுப்பினர்களை சேர்க்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி பண்ருட்டி ,ஆகிய சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு, ஏற்கனவே நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்களுடன் அந்தந்த பகுதியின் வாக்குச்சாவடிகளுக்கு மேலும் இரண்டு இளைஞர் அணி நபர்களின் பெயர்களை இடம் பெறும் வகையில் புதிய பட்டியல் தயார் செய்து மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளை கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி, இளைஞரணி சார்பில் மாபெரும் பேச்சுப்போட்டி சிறப்பாக நடத்திட திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், நகர இளைஞரணி அமைப்பாளர்கள், மற்றும் அந்தந்த கிளை கழக நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் தங்கள் பகுதியில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிக்கு கல்லூரிகளுக்கு சென்று பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்களை தேர்வு செய்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை மாநில மாவட்ட அளவில் நடைபெற உள்ள பேச்சு போட்டியில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், அந்தந்த பகுதிகளில் உள்ள கிளை கழக நிர்வாகிகளுடன் ஒன்றிணைந்து தங்கள் பகுதியில் உள்ள இல்லங்களுக்கு நேரில் சென்று மகளிர் அணிக்கு பெரும் அளவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என கூட்டம் தீர்மானிக்கிறது .

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கலைஞரின் கனவு இல்லம் - ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டத்தின் கீழ்

5,898 பயனாளிகளுக்கு ரூ.155.28 கோடி மதிப்பீட்டில் பணிஆணைகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஆக. 15 -

அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் அரியலூர் சட்டமன்றத் திற்குட்பட்ட அரியலூர், திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1563 பயனாளிகளுக்கும், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த 1543 பயனாளிகளுக்கும் மற்றும் ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 2792 பயனாளிகளுக்கும் என மொத்தம் 5,898 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுப் பார்த்தல் திட்டத்தின் கீழ் ரூ.155.28 கோடி மதிப்பீட்டில் பணி ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கலைஞரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுப் பார்த்தல் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

தமிழகத்தில் கிராமங்களில் உள்ள குடிசை வீடுகள் இருப்பதன் நிலையறிந்தும், வீடுகள் கட்ட முடியாமல் இருக்கும் ஏழை, எளிய மக்களின் நிலை உணர்ந்து அவர்களுக்கு வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று இந்தியாவிலேயே முதன் முதலில் வீடு கட்டித்தரும் திட்டத்தினை ஆரம்பித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்தான் கிராமத்தில் உள்ள குடிசை வீடுகளை கான்கீரிட் வீடுகளாக கட்டித்தரும் திட்டத் தினை செயல்படுத்தினார். அதனை பார்த்த பிறகுதான் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் அதனை பயன்படுத்தினார்கள். இந்திய அரசும் அந்த திட்டத்தை கையில் எடுத்து அதனை செயல்படுத்தினார்கள். 2006 - 2011 ஆண்டுகளில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை கொண்டுவந்தார்கள். குறிப்பாக நமது அரியலூர் மாவட்டம், குடிசைகள் மிகுந்த மாவட்டமாக இருந்தது. கோடைக் காலங்களில் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படும் சூழல் இருந்தது. அதனை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

பிறகு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மிகவும் குறைவான எண்ணிக்கையில் தான் வீடுகள் கட்டுகின்ற வாய்ப்புகள் வரும். மத்திய அரசும் அந்த எண்ணிக்கையை குறைத்து கொண்ட சூழலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு வீடுகளை கட்டித்தர வேண்டும். அது நல்லமுறையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கான நிதியினை ஒதுக்கி கடந்த ஒரு வார காலமாக கலைஞரின் கனவு இல்லம் கட்டும் பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 4200 வீடுகள் கட்டப்பட இருக்கிறது. அதே போல் ஏற்கனவே இருக்கின்ற வீடுகளில் பழுதுப்பார்பதற்கு 1698 வீடுகளுக்கு நிதி வழங்கப்பட இருக்கிறது.

இதில் அரியலூர் சட்டமன்றத்திற்குட்பட்ட அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 420 பயனாளிகளுக்கு ரூ.1470 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத் தின் கீழ் 185 பயனாளிகளுக்கு ரூ.99.91 இலட்சம் மதிப்பீட்டிலும், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 552 பயனாளிகளுக்கு ரூ.1932 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 406 பயனாளிகளுக்கு ரூ.190.59 இலட்சம் மதிப்பீட்டிலும், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1296 பயனாளிகளுக்கு ரூ.4536 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 247 பயனாளிகளுக்கு ரூ.124.63 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 662 பயனாளிகளுக்கு ரூ.2317 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 380 பயனாளிகளுக்கு ரூ.181.17 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 850 பயனாளிகளுக்கு ரூ.2975 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 219 பயனாளிகளுக்கு ரூ.106.28 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 420 பயனாளிகளுக்கு ரூ.1470 இலட்சம் மதிப்பீட்டிலும், கிராமப்புற வீடுகள் பழுதுப் பார்க்கும் திட்டத்தின் கீழ் 261 பயனாளிகளுக்கு ரூ.125.29 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் மாற்றத்தை கொண்டுவருகின்ற திட்டம் இதுவாகும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் குடிசை வீடுகள் அனைத்தும் மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கலைஞரின் அவர்களின் கனவினை நிறைவேற்றும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் என்ற சீரிய திட்டத்தினை செயல்படுத்தி இருக்கிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டங்களையும் பிற நாடுகள் பி ன்பற்றுகின்றன். கடந்த வாரம் தமிழ்ப் புதல்வன் என்ற திட்டத்தினை செயல்படுத்தி, 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அரசுப்பள்ளியில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மாணவிகளுக்கு இத்திட்டமானது புதுமைப் பெண் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு மாணவிகள் இத்திட்டத்தில் பயன்பெற்று வருகின்றனர்.

இதே போன்று ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பெண்கள் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணம் என்ற திட்டத் தினை செயல்படுத்தி 3 ஆண்டுகளாக மிக சிறப்பாக நிறை வேற்றப்பட்டு வருகிறது. 500 கோடி கட்டணமில்லா பயணங்களை பெண்கள் மேற்கொண்டுள்ளனர். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்ற சிறப்பான தொரு திட்டத்தினை செயல்படுத்தி மாதந்தோறும் மகளிருக்கு ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். விடுபட்ட வர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் நீங்கள் உங்களுடைய வீடுகளை கட்டிக் கொள்வதற்கான வாய்ப்புகளை பெற்றுள்ளீர்கள். மேலும் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை பின் பற்றியே மத்திய பிரதே சத்திலும் இதே போன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் தான் மற்ற மாநிலங்களில் செயல்படுத்துகிறார்கள் என்றால் எந்தளவிற்கு மக்களுக்கான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள இத்திட்டத்தினை பொதுமக்கள் பயன்படுத்தி தங்களுக்கான வீடுகளை கட்டிக்கொள்ளவேண்டும். பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களுக்கான சிறப்பு மிக்க திட்டங்களை தொடர்ந்து செய்படுத்தி வருகிறார்கள். எனவே, வீடுகள் கட்டும் பணிகளை எவ்வித தாமதமும் இல்லாமல் விரைவாக முடித்து பயன்பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

அதனைத் தொடர்ந்து, கூட்டுறவுத் துறையின் சார்பில் அரியலூர் வட்டார கூட்டுறவு விவசாயிகள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் அரியலூர் மாவட்ட பழங்குடியினர் மக்கள் கூட்டுறவு சேவை சங்கத்திற்கு புதியதாக சங்கம் பதிவு செய்யப்பட்டதற்கான பதிவு சான்றிதழ்களையும், பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகளையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ. / கொ & நி / வ.செ.அ.மி.நி - 2	119, 125	2

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/3047/ஒப்பந்தப்புள்ளி/2024

தலைமைச் செயலகத்தில், நேற்று (14.08.2024) தொலைநோக்கு சிந்தனையாளர் கலைஞர் குழுவின் கூட்டம், குழுவின் தலைவரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் / சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, உறுப்பினர் செயலர் / சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சூழல முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில் குமார் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

89வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் எம்.இ.சேகர் தலைமை!

சென்னை, ஆக.15-

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. வடக்கு பகுதி செயலாளர், 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி எம்.சி., தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால், பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர் ஆகியோரின் முன்னிலையில், 89வது வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில், நேற்று (14.08.2024) மாலை 7.30 மணிக்கு, வட்டக் கழக நிர்வாகிகளுக்கான அவசர ஆலோசனைக் கூட்டம் ஆபீஸர்ஸ் காலனி அருகில் உள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருகின்ற (18.8.2024) அன்று நடைபெற உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவம் பதியப்பட்ட 100 ரூபாய் நாணய வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் 89வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 பாக நிலை முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி, மாணவர் அணியினர், பி.எல்.சி. முகவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (14.08.2024) நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில், நடைபெற்று வரும் பொருநை அருங்காட்சியகம், கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம், கங்கை கொண்ட சோழபுரம், கொடுமணல், இராமநாதபுரம் அருங்காட்சியகம், குற்றாலம், பூண்டி, தருமபுரி அகழ்வைப்பகங்கள் உள்ளிட்ட புதிய அருங்காட்சியகப் பணிகள் மற்றும் இதர திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை அரசு முதன்மைச் செயலாளர்/ தொல்லியல் துறை ஆணையர் (மு.கூ.பொ) த. உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.